**செய்தி வெளியீடு எண்: 529** **16.08.2007**

# பத்திரிகைச் செய்தி

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 16.08.2007 அன்று சென்னை சேப்பாக்கம் வேளாண்மைத்துறை கூட்ட அரங்கில் காலை 11.00 அளவில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் திட்டவளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை செயலாளர் திரு.என்.வாசுதேவன் ஐ.ஏ.எஸ், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர் திரு.ஆர்.எஸ்.கண்ணா ஐ.ஏ.எஸ், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் திரு.ப.அண்ணாமலை ஐ.ஏ.எஸ், அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் மற்றும் சிறப்பு தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் பல்வேறு நலத்திட்டங்களில் இதுநாள் வரையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள்/ செயல்பாடுகள் பற்றி மாவட்ட வாரியாக ஆய்வு செய்யப்பட்டது. மேலும் வீட்டுமனைபட்டாக்கள் வழங்குவதில் மாவட்டவாரியான முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது. ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் 5 கோடிக்கு மேலாக நிதி தேவைப்படுமாயின் மேற்கொண்டும் தேவையான நிதி வழங்கப்படும். எனவே, இத்திட்டத்தில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும், TABCEDCO மூலம் வழங்கப்படும் தொழில்முனைவோருக்கான கடன் தொகைகளை விரைந்து வழங்குவது குறித்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

50 புதிய விடுதிகள் திறப்பதற்கான நடவடிக்கைகள், விடுதிகளில் மாணவர்கள் சேர்க்கை தொடர்பாகவும், விடுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டி மாண்புமிகு அமைச்சர்கள் / சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகள் பற்றியும் விரிவாக விவாதிக்கப்பட்டது. விடுதிகளில் காலியாக உள்ள காப்பாளர், சமையலர், காவலர் பணியிடங்களை விரைவில் நிரப்புவது குறித்த அவசியம் குறித்தும் ஆய்வுசெய்யப்பட்டது.

மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய கல்வி உதவித்தொகைகள், சீருடைகள், வேலைவாய்ப்பு தொடர்புடைய ஏனைய பயிற்சி திட்டங்கள் குறித்தும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விடுதிகளுக்கு சொந்தமாக கட்டிடங்கள் கட்டும் பணிகளை துரிதப்படுத்தவும், கட்டி முடிக்கப்பட்டுள்ள விடுதிகளை விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

1996-2001ம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதியைவிட பிற்படுத்தப்பட்டோர் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்துறைக்கு நடப்பு நிதியாண்டில் அதிக நிதி ஒதுக்கியுள்ளதையும், தற்போது விடுதி மாணவர்களுக்கு உணவு கட்டணத்தொகை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதையும், கருத்திற்கொண்டு மாணவர்களுக்கு தரமான உணவு வழங்கப்படுவது குறித்தும் சில்லரை செலவினத்திற்காக வழங்கப்படும் பல்வகை கட்டணத்தொகையை உரிய முறையில் மாணவர்களுக்கு செலவிடப்படுகிறதா என்பதை உறுதிசெய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் துறையின் வளர்ச்சிக்காக 15 தனித்தாசில்தார்கள் மற்றும் 10 ஈப்புகள் துறைக்கு அளிக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டி பொதுமக்கள் நலன்கருதி தற்போதுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் முழுஈடுபாட்டுடன் செயல்படவேண்டியதின் அவசியம் குறித்தும் அறிவுறுத்தப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**

**செய்தி வெளியீடு எண்: 529** **16.08.2007**

# பத்திரிகைச் செய்தி

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 16.08.2007 அன்று சென்னை சேப்பாக்கம் வேளாண்மைத்துறை கூட்ட அரங்கில் காலை 11.00 அளவில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் திட்டவளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை செயலாளர் திரு.என்.வாசுதேவன் ஐ.ஏ.எஸ், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர் திரு.ஆர்.எஸ்.கண்ணா ஐ.ஏ.எஸ், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் திரு.ப.அண்ணாமலை ஐ.ஏ.எஸ், அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் மற்றும் சிறப்பு தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் பல்வேறு நலத்திட்டங்களில் இதுநாள் வரையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள்/ செயல்பாடுகள் பற்றி மாவட்ட வாரியாக ஆய்வு செய்யப்பட்டது. மேலும் வீட்டுமனைபட்டாக்கள் வழங்குவதில் மாவட்டவாரியான முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது. ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் 5 கோடிக்கு மேலாக நிதி தேவைப்படுமாயின் மேற்கொண்டும் தேவையான நிதி வழங்கப்படும். எனவே, இத்திட்டத்தில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும், TABCEDCO மூலம் வழங்கப்படும் தொழில்முனைவோருக்கான கடன் தொகைகளை விரைந்து வழங்குவது குறித்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

50 புதிய விடுதிகள் திறப்பதற்கான நடவடிக்கைகள், விடுதிகளில் மாணவர்கள் சேர்க்கை தொடர்பாகவும், விடுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டி மாண்புமிகு அமைச்சர்கள் / சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகள் பற்றியும் விரிவாக விவாதிக்கப்பட்டது. விடுதிகளில் காலியாக உள்ள காப்பாளர், சமையலர், காவலர் பணியிடங்களை விரைவில் நிரப்புவது குறித்த அவசியம் குறித்தும் ஆய்வுசெய்யப்பட்டது.

மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய கல்வி உதவித்தொகைகள், சீருடைகள், வேலைவாய்ப்பு தொடர்புடைய ஏனைய பயிற்சி திட்டங்கள் குறித்தும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விடுதிகளுக்கு சொந்தமாக கட்டிடங்கள் கட்டும் பணிகளை துரிதப்படுத்தவும், கட்டி முடிக்கப்பட்டுள்ள விடுதிகளை விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

1996-2001ம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதியைவிட பிற்படுத்தப்பட்டோர் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்துறைக்கு நடப்பு நிதியாண்டில் அதிக நிதி ஒதுக்கியுள்ளதையும், தற்போது விடுதி மாணவர்களுக்கு உணவு கட்டணத்தொகை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதையும், கருத்திற்கொண்டு மாணவர்களுக்கு தரமான உணவு வழங்கப்படுவது குறித்தும் சில்லரை செலவினத்திற்காக வழங்கப்படும் பல்வகை கட்டணத்தொகையை உரிய முறையில் மாணவர்களுக்கு செலவிடப்படுகிறதா என்பதை உறுதிசெய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் துறையின் வளர்ச்சிக்காக 15 தனித்தாசில்தார்கள் மற்றும் 10 ஈப்புகள் துறைக்கு அளிக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டி பொதுமக்கள் நலன்கருதி தற்போதுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்கள் முழுஈடுபாட்டுடன் செயல்படவேண்டியதின் அவசியம் குறித்தும் அறிவுறுத்தப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**